
தமிழ்ப் பல்கலைக் கழகச்
# செய்தி மலர்

மலர்:6 திருவள்ளுவர் ஆண்டு 2018—சித்திரை—1 14—4—'87 இதழ்:1

## தமிழ்ப் புத்தாண்டில் தமிழ்ப் பல்கலைக் கழக நூலகக் கட்டடத் திறப்பு விழா

## தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைக்கிறார்கள்

தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் நூலகத்தின் புதிய கட்டடம் வட்ட வடிவழகில் வண்ணச் சிற்பமாக எழுப்பப்பட்டுள்ளது. திருவள்ளுவர் ஆண்டு 2018 சித்திரை முதல் நாளான தமிழ்ப் புத்தாண்டு நாளுக்கு நேரான 14—4—'87 செவ்வாய் மாலை 5 மணியளவில் இதன் திறப்புவிழா நிகழ்கிறது.



தமிழ்நாடு முதலமைச்சர் பொன்மனச் செம்மல் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் நூலகக் கட்டடத்தைத் திறந்துவைத்துச் சிறப்பிக்கிறார்கள்.

தமிழ்நாடு கல்வி, சட்ட அமைச்சரும் தமிழ்ப் பல்கலைக் கழக இணைவேந்தருமான மாண்புமிகு சி. பொன்னையன் அவர்கள் தலைமை வகிக்கிறார்கள். நிதியமைச்சர் மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும் தமிழ் வளர்ச்சி உயர்நிலைக் குழுத்தலைவர் டாக்டர் சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களும் வாழ்த்துரை வழங்குகின்றனர்.



துணைவேந்தர் முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் வரவேற்று உரையாற்றுகிறார்கள்.

சிறப்புமிகு இந்நிகழ்ச்சியில் பொன்மனச் செம்மல் அவர்கள் அருங்காட்சியகத்திற்கும் கணிப்பு மையத்திற்கும் அடிக்கல் நாட்டி வாழ்த்துரை வழங்குகிறார்கள்.

தமிழ்ப் பல்கலைக் கழகம் நிறுவியுள்ள மாமன்னர் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசும் அவரால் வழங்கப்படுகின்றது. பல்கலைக் கழகப் புதிய நூல்கள் வெளியிடப்பெறுகின்றன. அரசு உதவியில் தமிழ்ப் பல்கலைக் கழகம் வெளியிடும் 'பாரதி பாடல்கள்— ஆய்வுப் பதிப்பு' என்னும் புதுமைப் பதிப்பு இதில் இடம் பெறுகின்றது. பல்கலைக் கழகத்தின் பலமுனை வளர்ச்சிக்கு எடுத்துக் காட்டுகள் இவையெல்லாம்.

இத்தமிழ்ப் புத்தாண்டு தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு ஒரு முத்திரைப் புத்தாண்டாகிறது. புதிய கட்டடம், புதிய வெளியீடுகள், பாரதியின் புதிய பதிப்பு, புதுமைப் பரிசு ஆகிய புதுமைகளால் மட்டுமன்று; 1981—இல் தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தோற்றுவித்து அதன் திறப்பு விழாவை நிகழ்த்திச் சிறப்பித்த பொன்மனச் செம்மல் அவர்கள் அடுத்து இப்புத்தாண்டு நாளில் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வருகை தந்து சிறப்பிப்பதால் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஒரு புத்தாண்டு முத்திரையைப் பெற்றுப் பெருமை அடைகிறது.

# தமிழ்ப் பல்கலைக் கழக நூலகம்
# வரலாறு-பணிக் குறிப்புக்கள்

தமிழ்ப் பல்கலைக் கழகம் திருவள்ளுவர் ஆண்டு 2012 ஆவணி 30 (15—9—'81)—இல் முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களால் துவக்கிவைக்கப்பட்டது. முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களும் தமிழறிஞர் திரு வன்மீக நாதம் பிள்ளை அவர்களும் அந்நாள் துணைவேந்தர் முனைவர் வ.அய்.சுப்பிரமணியம் அவர்களும் தனித்தனியே ஒவ்வொரு நூலைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வழங்கினர். இவற்றைக் கொண்டு நூலகம் மலர்ந்தது.

### தனிக்குறிப்பு

அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் நூலகங்கள் செயற்படுகின்றன. தமிழ்ப் பல்கலைக் கழகம் எவ்வாறு ஆய்வுப் பல்கலைக் கழகமாக மற்றைப் பல்கலைக் கழகங் களிலிருந்து வேறுபடுகின்றதோ அதற்கேற்ப நூலகமும் ஆய்வுத் துணையாகச் செய்திச் சேகரிப்போடு நூலகப் பணியையும் ஆற்றுகிறது. இந்நூலகமே 'செய்திச் சேகரிப்பு நூலகப் பணி இயக்கம்' என்னும் பெயரில் ஓர் இயக்கமாக அமைக்கப் பட்டு ஓர் இயக்குநர் பொறுப்பில் இயங்குகிறது. இயக்ககத்தில் நூலகம் ஒரு பிரிவு. ஆய்வாளர்களின் திட்டங்களுக்கு உதவியாகத் தகவல்களைச் சேகரித்து வழங்குகிறது 'செய்திச் சேகரிப்புப் பிரிவு'.

### நூலகம்

நூலகம் அச்சு நூல்கள், கிடைத்தற்கரிய பழைய நூல்கள், அயல்நாட்டில் வெளியிடப்பெற்ற நூல்கள், மிகத் தொன்மையான நூல்களின் நுண்படப் பதிவுகள், நாளிதழ்கள், காலவாரி இதழ்கள் முதலியவற்றைப் பெற்று இயங்குகிறது. ஆங்கில நூல்களும் தமிழ் நூல்களும், குறைந்த அளவில் பிறமொழி நூல்களுமாக நூலகத்தில் 75,000 நூல்கள் இக் குறுகிய காலத்திலேயே இடம்பெற்றுள்ளன. தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வெளி மையங்களான காஞ்சி, உதகை, மண்டபம் மையங்களிலும், பேரகராதித் துறையிலும் அமைந்துள்ள நூலகப் பிரிவுகளின் நூல்களும் இந்நூலக அமைப்பில் அடங்கும்.

பல்வேறு அறிஞர்கள் தொகுத்து வைத்திருந்த தமிழ், ஆங்கில நூல்கள் அன்பளிப்பாகப் பெறப்பட்டுள்ளன. மொழி அறிஞர் தேவநேயப் பாவாணர், திரு தி.க.கனகசுந்தரம், திரு டி.வி.மகாலிங்கம், திரு டி.செ.செயவேலு ஆகியோர் தொகுப்புகளுடன் தமிழன்பர்கள் வழங்கிய அன்பளிப்பு நூல்களும் இதில் அடங்கும்.



1587-இல் கோவாவில் அச்சிடப் பெற்ற முதல் தமிழ் நூல் Doctrina Christum. இரண்டாவது தமிழ் நூல் Flos Sanctorum. ஆங்கிலத் தலைப்புடைய இவ்விரண்டு நூல்களின் படிகளும் இங்கு உள்ளன. பக்கத்தில் உள்ளது முதல் நூல் படம்.

**தமிழ்ப் பல்கலைக் கழகம் வழங்கும்**
**மாமன்னன் இராசராசன்**
**படைப்பிலக்கியப் பரிசு 1985–'86**

| | | |
|---|---|---|
| பரிசு பெறுவோர் | : | திரு கோவி. மணிசேகரன் |
| நூல் | : | 'வேங்கை வனம்' |
| பரிசுத் தொகை | : | உரு. ஓர் இலட்சத்து ஒன்று உரு. 1,00,001/— |
| தகுதிப்பாடு | : | திரு கோவி.மணிசேகரனின் படைப்புக்களில் வரலாற்று மாந்தர்கள் நடப்பியல் பண்போடுசித்திரிக்கப்படுவதும், கற்பனை மாந்தர்கள் தமிழ்ப் பண்புச் சித்திர அழகுடன் படைக்கப்பட்டிருப்பதும், நிகழ்ச்சிகள் கண்ணுக்கு முன்னர் நடப்பது போன்று உருவாகியிருப்பதும் குறிப்பிடத்தக்கன. |

இது மூன்றாவது ஆண்டுப் பரிசு

செந்தமிழ் இதழின் முதல் தட்டச்சுப்படி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது. நூலகம் ஆய்வாளர்க்கு மட்டும் வழங்கும் நூலகம் ஆகும்.

### நடமாடும் நூலகம்

இந்திய நாட்டில் முதல் நடமாடும் நூலகம் 1931—இல் நம் தமிழகத்தில்தான் தோன்றியது. இந்திய நூலகத் தந்தை எனப்படும் சீர்காழி திரு எசு.ஆர்.அரங்கநாதன் அவர்கள் இரட்டை மாட்டு வண்டி ஒன்றில் மன்னார்குடியில் இதனைத் தொடங்கி வைத்தார். இந்நூலகத்தில் அதன் நூல்கள் மட்டுமன்றி அம்மாட்டு வண்டியின் மாதிரி வடிவம் ஒன்றும் உள்ளது.

### இதழ்கள்

நூலகத்திற்கு வரும் நாளிதழ்கள் தமிழும் ஆங்கிலமுமாக 16. தமிழ் ஆங்கிலக் கால முறை இதழ்கள் 1100. தமிழகத்தில் வெளிவரும் எல்லா இதழ்களும் இந்நூலகத்திற்கு வருகின்றன. இவற்றுடன் உலகில் வெளிவரும் இதழ்கள் பலவும் புதிய கட்டடத்தில் தனியே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன.

### செய்திச் சேகரிப்புப் பணி

இந்திய தேசிய அளவில் அறிவியல், சமூக அறிவியல் முதலியவற்றிற்குத் தகவல் சேகரிப்பு மையங்கள் இருப்பதைப் போன்றது இச்செய்திச் சேகரிப்புப் பிரிவு. நிலப்படங்கள், தடைவரம்புக்குட்பட்ட நிலப்படங்கள், ஒளிப்பதிவு, ஒளிப் பதிவு இதழ்கள், நூல் விலைப் பட்டியல்கள், தகவல்கள் மின்படியெடுப்பு, நுண் ஒளிப்படப் பொறிப் படியாக்கல் முதலிய வகைகளில் சேகரிப்புப் பணி நிகழ்கின்றது.

### கணிப்பொறி வடிவமைப்பு

கணிப்பொறி வழியாக நூல் பட்டியல் உருவாக்கல், தகவல் தேர்ந்து அறிவித்தல் ஆகிய நூலகப் பணிகளுக்குக் கணிப் பொறியைப் பயன்படுத்தி, கணிப்பொறி வழியமைப்புகள் உருவாக்கப்படுகின்றன. இப்பணி இந்திய நாட்டளவில் முன்மாதிரியானது. இதற்கெனத் தனிக் கணிப்பொறியே உள்ளது.

# நூலகக் கட்டட விவரக் குறிப்பு

தமிழ்ப் பல்கலைக் கழக நூலகக் கட்டடம் புதுதில்லியில் உள்ள பாராளுமன்றக் கட்டடம் ஒத்து வட்ட வடிவமைப்பில் எழுப்பப்பட்டுள்ளது. இவ்வமைப்பில் இந்தியாவில் வேறு கட்டடம் இல்லை.

கட்டடச் செலவு உரூ.நூறு இலட்சம்; சிறப்புப் பணிகள் உரூ. இருபது இலட்சம். ஆக ஒரு கோடியே இருபது இலட்சம் உருவா செலவிலானது.

கட்டட வட்ட வடிவுப் பரப்பு 20,115 சதுர அடி. குறுக்களவு 180 அடி. சுற்றளவு 990 அடி. (ஒரு சுற்று நடந்தால் ஒன்றரை பர்லாங் நடை).

கட்டடத் தளங்கள் இரண்டு. அறைகள் 20. வெளிச்சுற்றில் தூண்கள் 70. தூண் ஒன்றின் உயரம் 20 அடி.

மையத்தில் மூன்று அடுக்குகள் கொண்ட மண்டபம் ஒன்று எழுப்பப்பட்டுள்ளது. இதன் உயரம் 200 அடி. மேலே குடை வடிவம் கொண்டது.

நூலகத்தின் பின்புறத்தில் திறந்தவெளிப் பேரரங்கம், இரண்டு இலட்சம் மக்கள் கூடும் வசதி கொண்டது.

கீழ்த்தளம் —நூல வழங்கு பகுதி, நூல்கள் பகுதி, அரிய நூல்கள் பகுதி, பட்டியலிடுதல், நூல் வெளியிடுதல், கணிப்பொறி வழித் தகவல், நோக்கீட்டு நூல்கள், காலமுறை இதழ்கள், ஒலி, ஒளித் தகவல், படியாக்கு பணி; இன்னும் இப்படிச் சில.

மேல்தளம் —படிப்பறைகள், நூல் காட்சிப் பகுதி, புற ஆய்வாளர்கள் படிப்பறை, செய்திச் சேகரிப்புப் பணி, முன் தொகுதிகள், ஆய்வாளர்கள், நூலக அலுவலர்கள் அறைகள்.

மையக் கட்டடம் —நாளேடுகள், நில வரைபடங்கள், நடமாடும் நூலக வண்டி, அரிய நூல்கள்.

நூலக அரங்கம் —நூலகத்தின் பின்பகுதியில் கருத்தரங்கக் கூடம் 200 இருக்கைகள் கொண்ட புதுமையான அரங்கம்.

---

# தமிழ்ப் பல்கலைக் கழக ஆறாவது ஆண்டுப் பணிகள்

தமிழ்ப் பல்கலைக் கழக இரண்டாவது துணைவேந்தராக முனைவர் ச.அகத்தியலிங்கம் அவர்கள் 1—12—'86—இல் பொறுப்பேற்றார்கள்.

1986—87 கல்வியாண்டில் தமிழ்ப் பல்கலைக் கழக நடை முறைப் பணிகள் பின்வருமாறு:

தமிழ்நாட்டரசும், பல்கலைக் கழக நல்கைக் குழுவும், இந்திய அரசும்,பிற தனி நிறுவனங்களும் வழங்கிய நல்கைகள் உரூ.154.44 இலட்சம். நிலையாக நிறுவப்பட்ட அறக் கட்டளைகள் 12 செயற்பட்டன. மாமன்னன் இராசராசன் படைப்பிலக்கியப் பரிசாக உரூ.1,00,001/— எழுத்தாளர் திரு செயகாந்தன் அவர்களுக்கு வழங்கப்பட்டது. திரு.வி.க. சொற்பொழிவுப் பரிசுச் சுழற் கோப்பையும், மறைமலை அடிகள் சொற்பொழிவுப் பரிசுச் சுழற்கோப்பையும் முறையே கல்லூரி மாணவர்க்கும், மாணவியர்க்கும் வழங்கப்பட்டன. முதலமைச்சர் பெயரால் அமைந்த இசைக்கருவிப் பரிசாகத் தம்புரா ஒன்று வழங்கப் பட்டது.

ஐந்து புலங்களில் உள்ள இருபது துறைகளில் 83 ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றுள் பல நிறைவேறிச் சில அச்சாகியுள்ளன. முதுமுனைவர் பட்ட ஆய்வாளர் பதி னொருவர், வெளிநாட்டாய்வாளர் ஐவர் ஆய்வு நிகழ்த்து கின்றனர்.

அனைத்துத் துறைகளிலும் 13 கருத்தரங்குகளும் 4 பணிப் பட்டறைகளும், 4 பயிற்சிப் பட்டறைகளும் 2 சான்றிதழ்ப் பயிற்சிகளும் நிகழ்ந்துள்ளன.

பதிப்புத் துறையில் 22 தமிழ் நூல்களும் 7 ஆங்கில நூல்களுமாக 29 நூல்கள் பதிப்பாகியுள்ளன. இவற்றுள் வாழ்வியற் களஞ்சியம் 2 தொகுதிகள், அறிவியல் களஞ்சியம் முதல் தொகுதி, சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம் இரண்டு தொகுதிகள் சிறப்புப் பதிப்புகள், 'மருந்தியல்,' 'கணிப்பொறி ஒருங்கும் பேசிக் மொழியும்' என்னும் இரு நூல்களும் தமிழ் நாட்டரசின் சிறந்த நூல்களுக்கான பரிசையும் பாராட்டையும் பெற்றன.

'செய்தி மலர்', "News Bulletin' ஆகிய திங்கள் இதழ்களும் 'தமிழ்க்கலை', 'Tamil Civilization' ஆகிய முத்திங்கள் இதழ்களும் வெளியிடப்பட்டன. இவ்வாண்டில் நூல்கள் உரூ. 5 இலட்சத்து 21 ஆயிரத்திற்கு விற்பனையாகியுள்ளன. பதிப்புத்துறை மறு தோன்றி அச்சகம் இருமுறைப் பணிகளில் பணியாற்றுகின்றது.

நூலகம் 1.20 கோடியில் எழுப்பப்பட்ட புதிய கட்டடத்திற்கு மாற்றப்படுகிறது. அருங்காட்சியகத்தைப் பார்வையிட்ட பொதுமக்கள் 4487; பள்ளி, கல்வி ஆய்வாளர்கள் 1150.

வயதுவந்தோர் கல்விப்பணி, கணிப்பொறியில் 4 மொழி எழுத்து வடிவமைப்பு, மைசூர், புதுதில்லியில் நாடகத் துறை 'நந்தன் கதை', 'துளிர்' நாடகங்கள் நடத்திப் பாராட்டுப் பெற்றமை, மேற்குச் செருமனியில் பொம்மலாட்டக் கலை நிகழ்ச்சியில் பங்கு கொண்டமை குறிப்பிடத்தக்கவை.

## தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்து

புதுமைப் பொலிவும் ஆய்வுப் பெருக்கமும்
நாட்டுவளமும் நலமும் புத்தாண்டே நல்குவதாக
தமிழ்ப் பெருமக்களுக்குத் தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

# செய்தி மலர்


தமிழ்ப் பல்கலைக் கழகம்

இ.அ.அ. மட்டும்.

37 ) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

## முதலமைச்சர் மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்கள் புத்தாண்டுப் புதுநாளில் வெளியிட்டுச் சிறப்பிக்கும் தமிழ்ப் பல்கலைக் கழகப் புதிய வெளியீடுகள்






### பாரதி பாடல்கள்

-ஆய்வுப்பதிப்பு

கவிமன்னன் பாரதி பாடல்கள் அனைத்தும் நிறைந்த முழுமை நூல். பாரதி எழுதிய கால அடுக்கில் பாடல்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. குறிப்புரைகள், பாட வேறுபாடு, உரிய தலைப்புகள், பொருள் அகர நிரல், பல்வகைக் குறிப்புப் பின்னிணைப்புகள் கொண்ட நிறைவு நூல்.

பாரதியார் வாழ்வியல் நோக்கு, கவிதைப் போக்கு, பாட்டுத்திறன் முதலியவற்றை ஆய்வதற்கு ஏற்ற அமைப்புடைய புதிய பதிப்பு.

பக். 1300; அளவு திம்மி 1/8; விலை உரூ.150/—

1. தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு
   —கே.எம்.வேங்கடராமையா — விலை உரூ.145/—


2. தஞ்சை மராட்டியர் கல்வெட்டுக்கள்
   —புலவர் செ.இராசு — விலை உரூ.84/—

3. தமிழ் ஆட்சி மொழி ஒரு வரலாற்று நோக்கு
   —துரை. சுந்தரேசன் — விலை உரூ.67/—

4. தென்னிந்தியக் குலங்களும் குடிகளும் தொகுதி—1
   —ஆங்கிலம் எட்கர் தர்ஸ்டன்
   தமிழாக்கம்: க. இரத்தினம் — விலை உரூ.105/—

5. வாழ்வியற் களஞ்சியம் தொகுதி—4 — விலை உரூ.300/—

6. Seminar Papers On Dialectology
   -S.Arokianathan — விலை உரூ.35/—



பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை

அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்—613 001.